# 10-04-2024 செய்தி

## சட்டம் சொல்வது என்ன?

**விதிமுறைகள் சொல்வது என்ன?**

- மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், பிரிவு 123 (3) இன்படி ஒரு வேட்பாளரோ, ஒரு வேட்பாளரின் ஒப்புதலுடன் வேறு எந்த நபரோ, அவரது மதம், இனம், சாதி, சமூகம் , மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வாக்களிக்க வேண்டும் அல்லது வாக்களிக்க வேண்டாம் என்று கூறுவது ஒரு தேர்தல் முறைகேடு ஆகும்.
- பிரிவு 123 (3ஏ) இன்படி தேர்தலின்போது குடிமக்களிடையே பகை அல்லது வெறுப்பு உணர்வைத் தூண்ட ஒரு வேட்பாளர் செய்யும் எந்தவொரு முயற்சியும் இதேபோல் தேர்தல் முறைகேடாகவே கருதப்படுகிறது.
- மேலும் விதிகளின் மூலம் தேர்தல் முறைகேட்டில் குற்றம்சாட்டப்பட்ட எவரும் அதிகபட்சமாக ஆறு ஆண்டுகள் வரை தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட சாத்தியமுள்ளது.
- அரசியல் கட்சிகள், வேட்பாளர்களுக்கான வழிகாட்டல் மற்றும் நடத்தை விதிகள் (எம்சிசி – Model Code of Conduct) அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் உருவாக்கப்பட்ட விதிமுறைகளின் தொகுப்பாகும்.
- இந்த விதிகளுக்குக் கட்டுப்பட அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் ஒப்புக்கொண்டே போட்டியிடுகின்றனர்.
- 1990களில் இந்த நடத்தை விதிகள் கண்டிப்புடன் செயல்படுத்தப்பட்டன.
- வாக்குகளைப் பெறுவதற்காகச் சாதி அல்லது வகுப்புவாத உணர்வுகளைத் தூண்டக் கூடாது என்றும் மசூதிகள், தேவாலயங்கள், கோயில்கள் அல்லது பிற வழிபாட்டுத் தலங்களைத் தேர்தல் பிரச்சாரத்துக்கான தளங்களாகப் பயன்படுத்தக் கூடாது என்றும் அந்த விதிமுறைகள் அறிவுறுத்துகின்றன.

**முக்கியத் தருணங்கள்:**

- 1961–க்கு முன்னர், மக்கள் பிரதிநிதிகள் சட்டத்தின் 123(3) பிரிவு, மதம், இனம், சாதி அல்லது சமூகத்தின் அடிப்படையில் அமையும் ஒரு வேட்பாளரின் தொடர் பிரச்சாரம், ஒரு தேர்தல் முறைகேடாகக் கருதப்படும் என்று கூறியுள்ளதும் குறிப்பிடத்தக்கது.
- இருப்பினும் வகுப்புவாத, பிளவுவாத, பிரிவினைவாதப் போக்குகளைத் தடுப்பதற்காக, 1961இல் மேற்கொள்ளப்பட்ட ஒரு திருத்தத்தின் மூலம் தொடர் என்ற சொல் அந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டது.
- இதன்பொருள் என்னவென்றால், ஒருவரின் மதம் அல்லது குறுகிய வகுப்புவாதம் சார்ந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில், தேர்தல்களில் வெற்றி பெறுவதற்கான தவறான ஒரே ஒரு முறையீடுகூட சட்டத்தால் தண்டிக்கப்படும் என்பதே.
- அபிராம் சிங் எதிர் சி.டி. கொமாச்சென் (2017) வழக்கில், ஏழு நீதிபதிகள் கொண்ட அமர்வில் பெரும்பான்மை நீதிபதிகள் (4:3), வேட்பாளர்கள் தங்கள் மதத்தின் அடிப்படையில் மட்டுமல்லாமல் வாக்காளர்களின் மதத்தின் அடிப்படையிலும் வாக்கு சேகரிக்கக் கூடாது என்று தீர்ப்பளித்தனர்.
- இதன்மூலம், வாக்காளர்களின் மதத்தின் பெயரில் எந்தவொரு பிரச்சாரம் நடைபெற்றாலும் அது தேர்தல் முறைகேடு என்றே கருதப்படும் சூழல் உருவாகிவிட்டது.

## சார்தாம் யாத்திரை

- உத்திராகண்டில் கேதார்நாத், பத்ரிநாத், கங்கோத்ரி, யமுனோத்ரி புனித தலங்கள் உள்ளன.
- இந்த 4 கோயில்களுக்கும் பக்தர்கள் மேற்கொள்ளும் புனிதப் பயணம் சார்தாம் யாத்திரை என்று அழைக்கப்படுகிறது.
- ஒவ்வொரு ஆண்டும் பனிப்பொழிவு அதிகமுள்ள குளிர் காலத்தில் இக்கோயில்களில் நடை அடைக்கப்படும்.
- வானிலையை பொறுத்து ஏப்ரல் அல்லது மே மாதத்தில் இக்கோயில்கள் திறக்கப்பட்டு அக்டோபர் அல்லது நவம்பர் வரை வழிபாட்டுக்கு அனுமதிக்கப்படும்.

SURESH'

## ஃபெடரர் சாதனையை முறியடித்த ஜோகோவிச்

**சாதனை**

- உலகத் தரவரிசையில் நம்பர் 1 இடத்திலிருக்கும் நோவக்ஜோகோவிச் தற்போது உலகின் மிக வயதான நம்பர் 1 வீரர் என்ற சாதனையை படைத்தார்.
- சுவிட்ஸர்லாந்து நட்சத்திரம் ரோஜர் ஃபெடரர் வசம் அந்த சாதனை இருந்த நிலையில், தற்போது 36 வயதான ஜோகோவிச் அதை முறியடித்திருக்கிறார்.
- ஏற்கெனவே, உலகின் நம்பர் 1 வீரராக அதிக காலகட்டம் மொத்தமாக 420 வாரங்கள் இருந்தவர் என்ற பெருமையும் ஆடவர் டென்னிஸில் 24 கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் வென் ஒரே வீரர் என்ற சாதனையும் அவர் வசம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## பருவநிலை பாதுகாப்பு மக்களின் உரிமை ஐரோப்பிய நீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பு

- பருவநிலை மாற்றத்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பது அரசுகளின் கடமை என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றம் வழங்கியது.
- காற்றில் கலக்கும் கரியமில வாயுவின் அளவைக் கட்டுப்படுத்துவதன் மூலம், புவி வெப்பமயமாதலையும் அதன் விளைவாக ஏற்படும் பருவநிலை மாற்றத்தையும் உறுப்பு நாடுகளின் அரசுகள் கட்டுப்படுத்துவதைக் கட்டாயமாகக் வலியுறுத்தி ஐரோப்பிய மனித உரிமைகள் நீதிமன்றத்தில் பல்வேறு தரப்பினர் மனு தாக்கல் செய்திருந்தனர்.
- ஸ்விட்சர்லாந்து பெண்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு, ஐரோப்பிய மனித உரிமைகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் 46 உறுப்பு நாடுகள் பருவநிலை மாற்றம் தொடர்பாக இனி எடுக்கவிருக்கும் முடிவுகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும்.

## மீண்டும் மன்னராட்சி கோரி நேபாளத்தில் வலுக்கும் போராட்டம்

- நம் அண்டை நாடான நேபாளத்தில், 2008ல் மன்னர் ஆட்சி முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. தற்போது அங்கு ஜனநாயக முறைப்படி ஆட்சி நடக்கிறது.
- நாங்கள் எங்கள் மன்னரையும், நாட்டையும் எங்கள் உயிரை விட அதிகமாக நேசிக்கிறோம். மன்னர் ஆட்சியை மீண்டும் கொண்டு வர வேண்டும்.
- ‘குடியரசை ஒழிக்க வேண்டும். தற்போதைய ஆட்சி முறையில் லஞ்சமும், ஊழலும் தலைவிரித்தாடுகிறது ’ என்று போராட்டம் வெடித்துள்ளது.

## ஒவ்வொரு அசையும் சொத்தையும் வேட்பாளர்கள் குறிப்பிட தேவையில்லை

- அருணாச்சல சட்டப் பேரவைக்கு கடந்த 2019-ல் நடைபெற்ற தேர்தலில் டெசு தொகுதியில் இருந்து சுயேச்சை வேட்பாளர் கரிக்கோ கிரி தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- இவரது வெற்றிக்கு எதிராக குவாஹாட்டி உயர்நீதிமன்றத்தில் காங்கிரஸ் வேட்பாளர் நுனி தயாங் வழக்கு தொடர்ந்தார்.
- அவர் தனது மனுவில், “கரிக்கோ கிரி தனது வேட்பு மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தனது மனைவி மற்றும் மகனுக்கு சொந்தமான 3 வாகனங்களை குறிப்பிடவில்லை ” என்று கூறியிருந்தார்.
- இதை ஏற்று, கரிக்கோ கிரியின் வெற்றி செல்லாது என குவாஹாட்டி உயர் நீதிமன்றம் அறிவித்தது.
- இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் கரிக்கோ கிரி வழக்கு தொடர்ந்தார். அவரது மனுவை நீதிபதிகள் அனிருத்தா போஸ், சஞ்சய் குமார் அமர்வு விசாரித்து வந்தது. இவ்வழக்கில் குவாஹாட்டி உயர் நீதிமன்ற தீர்ப்பை நீதிபதிகள் ரத்து செய்தனர்.
- நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில், ஒரு வேட்பாளரின் ஒவ்வொரு சொத்து பற்றியும் தெரிந்துகொள்வதற்கான முழு உரிமை வாக்காளருக்கு இல்லை வேட்பாளருக்கு அவரது வேட்பு மனுவுக்குப் பொருத்தமற்ற விஷயங்கள் குறித்த அந்தரங்க உரிமை உள்ளது.
- கணிசமான மதிப்பு அல்லது ஆடம்பரமான வாழ்க்கை முறையைப் பிரதிபலிக்காத பட்சத்தில், வேட்பாளர்கள் தங்களுக்கு அல்லது தங்கள் குடும்பத்தினருக்கு சொந்தமான அனைத்து அசையும் சொத்துகளையும் வெளியிடத் தேவையில்லை என்ற கூறியுள்ளனர்.

வெற்றியின் முகவரி SINCE 2006 SURESH' IAS ACADEMY